Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C E 185/25

1. District : Tiruppur PS: V SAC Year: 2025 FIR No.: 5/2025/AC FIPR Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 07.05.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 05.05.2025 Date to : 06.05.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : At about Time to : At about 09.30hrs
நேர அளவு நேரம் முதல் 13.30hrs நேரம் வரை
(b).Information Received at PS. Date : 07.05.2025 Time : 07.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 07.05.2025 Time : 07.00hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol. 3 நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil. Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 22Km East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : O/o. Assistant Engineer, OSM, TNPDCL,
முறைக் காவல் எண் முகவரி Padiyur, Tiruppur.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Saminathan (b) Father's/ Husband's Name : R. Palanisamy gounder.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1/1/2025 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Agriculture (g) Address : Door No. 2/101, Meenakshivalasu, Maruthurarian Valasu Post, Tiruppur.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Venkatesan, Junior Engineer, OSM, TNPDCL, Padiyur, Tiruppur.
2) Tr. Nandagopal, Foreman, TNPDCL, Padiyur, Tiruppur

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at itern No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைபைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Saminathan 7/5/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07.05.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Gowsilekha
Rank: நிலை Sub Inspector of Police
VSAC, Tiruppur
07.05.2025

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2025/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 07.05.2025-ம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது P.சாமிநாதன், த/பெ.பழனிச்சாமிகவுண்டர், கதவு எண் 2/101, மீனாட்சி வலசு, மருதுரையான் வலசு போஸ்ட், திருப்பூர் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் P.சாமிநாதன், த/பெ.பழனிச்சாமி கவுண்டர், கதவு எண் 2/101, மீனாட்சி வலசு, மருதுரையான் வலசு போஸ்ட், திருப்பூர் பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், மருதுரையான்வலசு போஸ்ட், மீனாட்சி வலசில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு சொந்தமாக சிவன்மலை கிராமம், கரட்டுப்பாளையத்தில் க.ச.எண்.953/2A-ல் 2.22.00 ஹெக்டேர் மற்றும் க.ச.எண்.953/2C-ல் 2.13.00 ஹெக்டேர் விவசாய நிலம் உள்ளது. அந்த இடத்தில் 4 கடைகள் கட்ட சிவன்மலை ஊராட்சியில் கட்டிட அனுமதி பெற்று டிசம்பர் மாதத்தில் கட்டி முடித்தேன். அந்த கடைகளுக்கு கதவு எண்கள்.1/375, 1/376, 1/377 மற்றும் 1/378 என ஊராட்சியில் வழங்கப்பட்டது. அந்த கடைகளுக்கு தனித்தனியாக மின் இணைப்பு பெற தனித்தனியாக 4 விண்ணப்பங்களை சிவன்மலையில் உள்ள பிரவுசிங் சென்டரில் ஆன்லைனில் 12.03.2025 - தேதி விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பத்துடன் நிலத்திற்கான ஆவணம், கடை வரி ரசீதுகள், கட்டிட அனுமதி மற்றும் உரிய ஆவணங்களை இணைத்தேன். பின்னர் மறுநாள் படியூரில் உள்ள தமிழ்நாடு பகிர்மான கழகம் லிமிடெட், AE அலுவலகத்திற்கு சென்று JE வெங்கடேசன் அவர்களை பார்த்து கடைகளுக்கு மின் இணைப்புக்கு விண்ணப்பித்த விபரத்தை தெரிவித்துவிட்டு அவரிடம் ஒரு மின் கம்பம் போட்டு தருமாறும் கேட்டேன். அவர் இடத்தை பார்க்க வருவதாகவும் மின்கம்பத்திற்கான செலவை நீங்களே பார்த்து

கொள்ளுமாறு சொன்னார். அப்போது அவரிடம் சிவன்மலை ஊராட்சியிலிருந்து கடைகள் கட்டி முடித்ததற்கான சான்றை காண்பித்தேன். அந்த சான்றை பார்த்துவிட்டு இதில் S.F நம்பர் வரக்கூடாது, கடைகளுக்கான கதவு எண்களை குறிப்பிட்டு சான்று வாங்கிவிட்டு வர சொன்னார். அதன்பின்னர் அந்த விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது. அதனால் நான் மீண்டும் சிவன்மலை ஊராட்சியில் JE அவர்கள் சொன்னபடி கடைகளுக்கான கதவு எண்களை குறிப்பிட்டு மீண்டும் சான்று வாங்கினேன். அதன்பின்னர் நான் உரிய ஆவணங்களுடன் மீண்டும் ஆன்லைனில் 27.03.2025 தேதி விண்ணப்பம் செய்தேன். அதன்பின்னர் AE அலுவலகம் சென்று அங்கிருந்த வாசு என்பவரிடம் கடைகள் கட்டி முடித்ததற்கான சான்றை கொடுத்தேன். ஒவ்வொரு மின் இணைப்புக்கும் ரூ.8,840/- கட்ட வேண்டும் என எனது செல்போனுக்கு மெசேஜ் வந்தது. நான் ஒரு மின் இணைப்புக்கு ரூ.8,840/- வீதம் 4 மின் இணைப்புகளுக்கு ரூ.35,360/- ஆன்லைனில் 01.04.2025 தேதி கட்டினேன். அதற்கு 4 ரசீது கொடுத்தார்கள். அதன்பின்னர் படியூரில் உள்ள AE அலுவலகத்திற்கு சென்று JE வெங்கடேசன் அவர்களை பார்த்து கடைகளுக்கு மின் இணைப்புக்கு மீண்டும் விண்ணப்பித்த விபரத்தையும், மீட்டருக்கான தொகைகளை கட்டிய விபரத்தையும் தெரிவித்துவிட்டு ஒரு மின் கம்பம் போட்டு தருமாறும் கேட்டேன். அதற்கு அவர் இடத்தை பார்க்க AD வருவார் அவர் பார்த்த பின்னர் எஸ்டிமேட் தயார் செய்த பின்னர் மின்கம்பத்திற்கு எவ்வளவு கட்ட வேண்டும் என உங்களது செல்போனுக்கு மெசேஜ் வரும் என்று சொன்னார். மின்கம்பம் அமைக்க ரூ.15,737/- கட்ட வேண்டும் என எனது செல்போனுக்கு மெசேஜ் வந்தது. நான் ரூ.15,737/- ஐ ஆன்லைனில் 21.04.2025 தேதி கட்டி ரசீது பெற்று கொண்டேன். 03.05.2025 தேதி மாலை சுமார் 7 மணிக்கு செல்போன் எண்.7373776565 லிருந்து எனது செல்போன் எண்.9843082392 பேசியவர் படியூர் ஈபி அலுவலகத்திலிருந்து பேசுவதாக கூறி உங்களுக்கு போல் வந்துவிட்டது திங்கட்கிழமை வந்து போல் போட வருவதாக கூறினார். 05.05.2025 தேதி காலை சுமார் 09.30 மணியளவில் போர்மேன் நந்தகோபால் என்பவர் அவரது செல்போன் எண்.9443574406 லிருந்து எனது செல்போனுக்கு கால் செய்துள்ளார். நான் செல்போன் அழைப்பை ஏற்கவில்லை. அதன்பின்னர் நான் அழைத்த போது அவருக்கு போன் அழைப்பு கிடைக்கவில்லை. நான் இடத்திற்கு வந்த போது சுமார்

10.30 மணியளவில் போர்மேன் நந்தகோபால் என்பவருடன் 6 நபர்கள் இடத்திற்கு வந்து போல் போட்டு கொண்டிருந்தார்கள். போல் போட்ட பின்பு சுமார் 1.30 மணியளவில் போர்மேன் JE யிடம் பேசிவிட்டு வருவதாக சொல்லிவிட்டு சிறிது தூரம் சென்று பேசிவிட்டு வந்து உங்களுக்கு மீட்டர் வந்துவிட்டது. இன்றைக்கே ஒயரிங் வேலைகளை முடித்துவிடுங்கள். வேறு போர்மேன் வந்து மீட்டர் பொருத்தி மின் இணைப்பு கொடுப்பார் என்று சொன்னார். JE அவருக்கு தனியாக பணம் ரூ.10,000/- செலவுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார் என்று சொன்னார். அதற்கு நான் இதற்கே நிறைய செலவு செய்துவிட்டேன். பணம் தரமுடியாது என்று கூறினேன். அதற்கு போர்மேன் நாளை அலுவலகம் வந்து JE அவர்களை பார்த்து பேசி கொள்ளுங்கள் என்று சொன்னார். 06.05.2025 தேதி காலை சுமார் 09.00 மணியளவில் படியூரில் உள்ள அலுவலகத்திற்கு சென்று JE அவர்களை பார்க்க சென்ற போது JE அவர்கள் அலுவலகத்தில் இல்லை. நான் போர்மேன் நந்தகோபால் அவர்களிடம் கேட்ட போது JE வந்து விடுவார் என்று கூறினார். சிறிது நேரம் காத்திருந்துவிட்டு அலுவலகத்தில் இருந்தவரிடம் கேட்ட போது இன்று JE அலுவலகம் வரமாட்டார் என கூறினார். அதனால் நான் சுமார் 09.30 மணிக்கு எனது செல்போனிலிருந்து JE வெங்கடேசன் அவர்களது செல்போன் 9445852095 க்கு தொடர்பு கொண்டு பேசிய போது நேற்று போல் போட்டு விட்டார்கள் என்று சொன்ன போது ஒயரிங் செய்யுங்கள் நான் மீட்டர் மாட்டி கனெக்சன் கொடுக்க சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு எனக்கு தனியாக பணம் ரூ.10,000/- கொடுத்துவிடுங்கள். அதை நான் நந்தகோபாலிடம் சொல்லியுள்ளேன். நான் கேட்ட பணத்தை அவரிடமே கொடுத்துவிடுங்கள் கொஞ்சம் செலவிருக்கிறது என்று கூறினார். எனக்கு பணம் ரூ.10,000/- லஞ்சமாக படியூர் JE திரு.வெங்கடேசன் அவர்களுக்கு போர்மேன் நந்தகோபால் அவர்கள் மூலமாக கொடுக்க விருப்பமில்லை. எனவே எனது பெயரில் உள்ள 4 கடைகளுக்கு மின் மீட்டர் பொருத்தி மின் இணைப்பு வழங்க லஞ்சம் கேட்கும் JE திரு.வெங்கடேசன் மற்றும் அவருக்கு துணையாக இருக்கும் போர்மேன் திரு.நந்தகோபால் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx P.Samynathan, 7/5/2025. Sir, Received the complaint on 07.05.2025 at 07.00 hrs and made preliminary verification between 07.00 hrs and 07.30 hrs after getting approval from DVAC, Chennai and

registered a case in Tiruppur V&AC Cr.No.5/2025/AC/TPR u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 07.05.2025 between 07.30 hrs to 08.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 07/05/2025 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of P.Samynathan, S/o.Palanisamygounder, Door.No.2/201, Meenatchi valasu, Maruthurayan valasu Post, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 07.05.2025.